செ.வெ.எண்.189/2018 நாள்: 10-05-2018

**காட்டாங்கொளத்தூரில் சமூக நலத்துறை சார்பில் 1719 பயனாளிகளுக்கு 13.752 கிலோ கிராம் தங்கமும், ரூ.6 கோடியே 21 லட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவியும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் திருமதி.வி.சரோஜா அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஜே.ஆர்.கே. மேல்நிலைப் பள்ளியில் ஏழை பெண்களுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் திருமதி.வி.சரோஜா அவர்கள் பங்கேற்று, 1719 பயனாளிகளுக்கு 13.752 கிலோ கிராம் தங்கமும், ரூ.6 கோடியே 21 லட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவியும், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு நிதியுதவி திட்டத்தின்கீழ் 50 பயனாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 3 ஆயிரத்து 50 மதிப்பிலான இலவச தையல் இயந்திரம் வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.35 ஆயிரம் மதிப்பிலான சக்கர நாற்காலியும், 10 பயனாளிகளுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பிலான சி.வி.சேரும், 4 பயனாளிகளுக்கு ரூ.32 ஆயிரம் மதிப்பிலான செயற்கை கால் உபகரணமும், 3 பயனாளிகளுக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பிலான காலிபரும், ஒரு பயனாளிகளுக்கு ரூ.800 மதிப்பிலான ஊன்றுகோல் கருவியும், 5 பயனாளிகளுக்கு ரூ.3 ஆயிரம் மதிப்பிலான எல்போ உன்றுகோலும், 5 பயனாளிகளுக்கு ரூ.6 ஆயிரம் மதிப்பிலான ரோலேடாரும், 2 பயனாளிகளுக்கு ரூ.12 ஆயிரம் மதிப்பிலான மூன்று சக்கர வண்டியும், 8 பயனாளிகளுக்கு ரூ.8 ஆயிரம் மதிப்பிலான காதொலி கருவியும் ஆக மொத்தம் 1814 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது,

மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்கள் பாதுகாப்பு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் உட்பட பல்வேறு திட்டங்களை பெண்களின் நலனுக்காக செயல்படுத்தி உள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசானது தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, திருமண நிதியுதவியாக பட்டதாரிகளுக்கு ரூ.50 ஆயிரமும், பட்டதாரி அல்லாதோருக்கு ரூ.25 ஆயிரமும், திருமாங்கலயம் செய்வதற்கு 4 கிராம் தங்கமும் வழங்கினார்கள். 23.5.2016 அன்று 6வது முறையாக முதலச்சராக பொறுப்பேற்றவுடன் 4 கிராம் தங்கத்தை 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்கினார். தமிழ்நாடு முழுவதும் 2011 முதல் 2018 வரை 5.6 லட்சம் பட்டத்தாரிகள், 4.9 லட்சம் பட்டதாரி அல்லாதோர் என ஆகமொத்தம் 10 லட்சத்து 15 ஆயிரம் பயனாளிகள் 1180 கோடி மதிப்பில் 4300 கிராம் தங்கமாகவும், ரூ.3500 கோடி திருமண நிதியுதவியாகவும் சேர்த்து ரூ.4680 கோடி மதிப்பீட்டில் பயனடைந்துள்ளார்கள்.

திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2011 முதல் ஏப்ரல் 2018 வரை 48 ஆயிரத்து 559 பயனாளிகளுக்கு 220 கிலோ கிராம் தங்கமும், ரூ.160 கோடியே 13 லட்சம் திருமண நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. இன்று 765 பட்டதாரிகள், 954 பட்டதாரி அல்லாதோர் என 1719 பயனாளிகளுக்கு 14 கிலோ கிராம் தங்கமும், ரூ.6 கோடியே 21 லட்சம் திருமண நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு நிதியுதவி

திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 16 ஆயிரத்து 413 பயனாளிகளுக்கு ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 1993 ஆம் ஆண்டில் தனித்துறை ஏற்படுத்தி, 1994ஆம் ஆண்டு மாநில கொள்கை வெளியிட்டார். தமிழகத்தில் உள்ள 12 லட்சம் மாற்றுத் திறனாளிகளில் 99 சதவீதம் நபர்களுக்கு மருத்துவ சான்றிதழுடன் அடையாள அட்டை உள்ளது. 2014 ஆம் ஆண்டு 1928 பின்னடைவு காலிப்பணியிடங்கள் கண்டறிந்து 1238 பணியிடங்கள் நிரப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ரூ.12 கோடி மதிப்பில் 2000 மாற்றுத்திறனாளிகள் இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் கூட்டர் வழங்கப்படுகிறது என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.என்.ராமச்சந்திரன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜெ.ஜெயவர்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிட்லப்பாக்கம் ராஜேந்திரன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.எஸ்.ராஜு திரு.தண்டரை மனோகரன், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.காஞ்சி பன்னீர்செல்வம், சமூக நலத்துறை இணை இயக்குநர் திருமதி.ரேவதி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சங்கீதா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.